## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, UTHUKULI

## STC 385/2024

## PW- 1

பெயர் : சசிகுமார்

த/பெ : பழனிச்சாமி

வயது : 48

தேதி : 27.02.2026.

Accused present.

**சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்ட சத்தியபிரமாணத்தின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

4. நான் நிறுவனம் வைத்துள்ளது போல் எதிரியும் நிறுவனம் வைத்துள்ளார். எனக்குத் தெரிந்து நினைவு உள்ள வரையில் அவரது நிறுவனத்தின் பெயர் பி எம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ். எதிரி என்னிடம் பர்ச்சேஸ் ஆர்டர் அடிப்படையில்தான் பொருட்களை வாங்குவது வழக்கம் என்றால் இல்லை, அவர் போன் மூலம் சொன்னால் நான் பொருட்களை அனுப்புவது வழக்கம். எதிரியின் அலுவலகம் பல்லடம் ரோடு வீரபாண்டியில் உள்ளது. இந்த வழக்கு எனக்கும் எதிரிக்கும் இடையே நடைபெற்ற வியாபார பரிவர்த்தனை சம்பந்தப்பட்ட வழக்கு என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த எந்த ஒரு இன்வாய்ஸிலும் எதிரியின் நிறுவனத்தின் பெயர் குறிப்பிடவில்லை

B DHARANEETHER
Digitally signed by B DHARANEETHER
Date: 2026.02.27 16:58:47 +0530

என்றால் சரிதான், எதிரியின் பெயர் குறிப்பிட்டு அவர் யாரது வீட்டிற்கு அனுப்ப சொல்கிறாரோ, அவரது பெயரும் குறிப்பிடப்படும்.

5. அவ்வாறு பொருளை நான் அனுப்பிவிட்டு எதிரிக்கு தகவல் சொல்லி விடுவேன். எங்களுக்குள் ஆவணம் அடிப்படையில் பொருள் அனுப்புவதில்லை என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தில் டெலிவரி நோட் பயன்படுத்தும் வழக்கம் உள்ளது. பொருட்களை இறக்கிவிட்டு டெலிவரி நோட்டில் கையெழுத்து வாங்கும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. நாங்கள் பொதுவாக இரண்டு டெலிவரி நோட்டுகள் வைத்திருப்போம், ஒன்று வாகனத்தில் கொடுத்து விடுவோம், மற்றொன்று பணத்தை செலுத்தும் போது கொடுத்து விடுவோம். நான் தாக்கல் செய்த இன்வாய்ஸில் டெலிவரி நோட் எண் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

6. டெலிவரி நோட் சம்பந்தமாக எந்த ஒரு ஆவணமும் என்னிடம் இருக்காது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த நான்கு இன்வாய்ஸ்கள் கிரீன் பார்க் கணபதிபாளையம் என்ற முகவரிக்கு பொருட்களை அனுப்பியதாக உள்ளது. மேற்படி கிரீன் பார்க் உரிமையாளர் யார் என்று தெரியுமா என்றால் தெரியாது, எதிரி கூறும் இடத்திற்கு பொருள்களை அனுப்புவோம் அவ்வளவுதான். நான் அனுப்பிய பொருட்கள் வீட்டு வேலைக்காக அனுப்பப்பட்டதா? அல்லது தொழில் கட்டிடங்களுக்காக அனுப்பப்பட்டதா? என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

7. எதிரி எப்போது எங்கு வைத்து எந்த விதத்தில் என்னை அணுகி ஆர்டர்கள் கொடுத்தார் என்று, எனது புகாரில் சொல்லவில்லை என்றாலும், அதனை காட்ட எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். எனக்கும், எதிரிக்கும் இடையே இரண்டு ஆண்டுகள் வியாபார

B DHARANEETHER
Digitally signed by B DHARANEETHER
Date: 2026.02.27 16:58:53 +0530

பழக்கம் இருந்தது. எதிரி எனக்கு கொடுக்க வேண்டிய தொகைகளை நேரடியாகவும், ஜி பே மூலமாகவும், காசோலைகள் மூலமாகவும் கொடுப்பது வழக்கம். மேற்படி கிரீன் பார்க் நிறுவனத்தின் உரிமையாளர் பெயர் பிரேம் குமார் என்றாலும், மேற்படி பிரேம்குமாரின் வங்கி கணக்கிலிருந்து எனக்கு எதிரி சொன்னதின் பெயரில் ரூபாய் ஒரு லட்சம் மாற்றப்பட்டுள்ளது என்றாலும் பில்-ஐ பார்த்துதான் சொல்ல வேண்டும்.

**(எதிரி தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க வங்கி ஆவணங்கள் அடிப்படையில் விசாரணை செய்ய குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியிடம் கையெழுத்து பெறப்பட்டது.

மாவட்டஉரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்
ஊத்துக்குளி

B DHARANEETHER

Digitally signed by B DHARANEETHER
Date: 2026.02.27 16:58:59 +0530